**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-10042026-10719

Volume: 10

Issue: 4

Month: April

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 02.03.2026

Accepted: 30.03.2026

Published: 01.04.2026

Citation:
Pushpagavalli, M." Domestic Virtues of the Hero as Depicted in the Kurinji Thinai of Ainkurunooru." *Shanlax International Journal of Tamil Research*, vol.10, no.4, 2026, pp. 52-57

DOI:
https://doi.org/10.34293/tamil.v10i4.10719

*Corresponding Author:
vmariselvi1995@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Domestic Virtues of the Hero as Depicted in the Kurinji Thinai of Ainkurunooru

**M. Pushpagavalli**
*Assistant Professor, Department of Tamil*
*A.B.C. Mahalakshmi Women's College, Thoothukudi*

**Abstract**
*Ainkurunooru is one of the celebrated classical Sangam anthologies of Tamil literature, comprising five hundred short poems. The Kurinji Thinai poems, dealing with the mountain landscape, vividly portray the theme of premarital love and union. Within this thematic framework, the hero (Thalaivan) emerges not only as a romantic figure but also as one who embodies significant domestic virtues. This paper explores the household qualities and ethical values attributed to the hero in the Kurinji Thinai poems of Ainkurunooru, shedding light on the classical Tamil ideals of manhood, love, commitment, and domestic responsibility.*
***Keywords:*** *Ainkurunooru, Kurinji Thinai, Sangam Literature, Hero (Thalaivan), Domestic Virtues, Classical Tamil Poetry.*

**References**
1. Akananooru — R. Jeyapal (Commentary), New Century Book House, Chennai - 98, First Edition 2007.
2. Ainkurunooru — A. Thakshanamoorthy (Commentary), New Century Book House, Chennai - 98, First Edition 2004.
3. Thirukkural — Gna. Devaneyap Paavanar (Commentary), Vaiyavi Pathippagam, 700, M.I.G. Main Road, Chennai - 42, First Edition 2010.
4. Tholkaappiyam Porul — Nacchinarkiniyar (Commentary), International Institute of Tamil Studies, Chennai, First Edition 2007.
5. Pathupattu — V. Narayanan (Commentary), New Century Book House, Chennai, First Edition 2004.
6. Purananuru — Ku. Ve. Balasubramanian (Commentary), New Century Book House, Chennai, First Edition 2009.

# ஐங்குறுநூறு குறிஞ்சித்திணை சுட்டும் தலைவனின் இல்லற மாண்புகள்

**M. புஷ்பகவல்லி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி

***ஆய்வுச் சுருக்கம்***
*ஐங்குறுநூறு தமிழ் இலக்கியத்தின் சிறப்புமிக்க சங்க தொகை நூல்களுள் ஒன்றாகும். இது ஐந்நூறு குறும்பாடல்களை உள்ளடக்கியது. மலைசார் நிலத்தை (குறிஞ்சி) பின்னணியாகக் கொண்ட குறிஞ்சித்திணைப் பாடல்கள், திருமணத்திற்கு முந்தைய காதல் மற்றும் இணைவு என்ற கருப்பொருளை உயிரோட்டமாகச் சித்திரிக்கின்றன. இந்தக் கருவியமைப்பிற்குள், தலைவன் ஒரு காதலுணர்வு மிக்க ஆளுமையாக மட்டுமன்றி, குறிப்பிடத்தக்க இல்லற மாண்புகளை உள்வாங்கியவனாகவும் திகழ்கிறான். இந்த ஆய்வுக் கட்டுரை, ஐங்குறுநூற்றின் குறிஞ்சித்திணைப் பாடல்களில் தலைவனுக்கு இயைபுடைய இல்லற நலன்களையும் நெறி மதிப்பீடுகளையும் ஆராய்கிறது. இதன்வழி, ஆண்மை, காதல், அர்ப்பணிப்பு மற்றும் இல்லற பொறுப்பு ஆகியவை குறித்த சங்ககாலத் தமிழ் இலட்சியங்களை வெளிச்சமிடுகிறது.*
***திறவுச்சொற்கள்:*** *ஐங்குறுநூறு, குறிஞ்சித்திணை, சங்க இலக்கியம், தலைவன், இல்லற மாண்புகள், சங்கப் பாடல்கள்.*

## முன்னுரை

சங்க இலக்கியப் பாடல்களுள் ஐங்குநுறூறு தனிச் சிறப்புப் பெற்றுத் திகழ்கிறது. மருதத்திணைப் பாடல்களை முதலாவதாகக் கொண்டு மூன்று அடி சிற்றெல்லை முதல் ஆறு அடி பேரெல்லையாகக் கொண்டு விளங்குகிறது. குறிஞ்சித்திணைப்பாடல்களின்வழி அந்நில மக்களின் வாழ்வியலை அறிய முடிகிறது. திணைக்கோட்பாடு அடிப்படையில் குறிஞ்சிப் பாடல்களின் கருத்தாக்கங்கள் முதல், கரு, உரிப்பொருளாக விளக்கம் பெறுகின்றன. குறிஞ்சி நிலமாகிய முதற்பொருளில் கருப்பொருளின் வழி உரிப்பொருளை அடைவதை இப்பாடல்கள் நோக்கமாகக் கொண்டுள்ளன. ஐங்குறுநூறு உணர்த்தும் குறிஞ்சிநில மக்களின் அகவாழ்வில் தலைவனின் இல்லற மாண்புகளை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

## குறிஞ்சித்திணை

நில அடிப்படையில் மலையும் மலை சார்ந்த பகுதி குறிஞ்சித்திணை என்று அழைக்கப்படுகிறது. அத்திணையில் வாழ்கின்ற மக்களின் வாழ்வியலை ஐங்குறுநூறு பாடல்வழி காண்பது நோக்கமாகும். அந்நிலத்தில் உள்ள அகமாந்தர்களின் மன உணர்வைச் சங்கப் பாடல்கள் பிரதிபலிக்கின்றன. பழந்தமிழரின் வாழ்வியலில் திருமணத்திற்கு முந்தைய காதல் வாழ்க்கை என்பது நெறிமுறையாகவே பின்பற்றப்பட்டிருந்ததைச் சங்கப்பாடல்கள் உணர்த்துகின்றன. நல்ஊழின் காரணமாகக் காதல் வயப்படுதலும் இயற்கைப் புணர்ச்சியைத் தெய்வப் புணர்ச்சி என்று கூறப்படுவதிலிருந்து அகவாழ்வின் இலக்கணம் சுட்டிக்காட்டப்படுகிறது. காதலர்கள் களவொழுக்கத்தில் இரவுக்குறி. பகற்குறி, அல்லகுறி என குறியிடத்தில் காதலை வளர்ப்பதில் குறியிடம் முக்கியத்துவம் பெறுகிறது. ஒரே இடத்தில் மீண்டும் மீண்டும்

சந்திக்க விரும்புவது இடந்தலைப்பாடு என்று அழைக்கப்படுகிறது. களவு வாழ்க்கைக்குப் பின் அறத்தொடு நின்று கற்புவாழ்க்கை மேற்கொள்கின்றனர்.

**களவொழுக்கம்**

குறிஞ்சி நிலத்தோடும் பொழுதோடும் விளையாடி மகிழ்ந்த பருவ வயது தலைவியைத் தினைப்புனம் காவலில் ஒத்த அன்புடையத் தலைவன் கண்டு காதல் வயப்படுகிறான். இருவரும் முதற் பொருளான மலையும் மலைசார்ந்த குறிஞ்சி நிலக்காட்சி களையும் பருவங்களையும் கண்டு மகிழ்ந்து தங்கள் காதலுக்கு அடித்தளமிடுகின்றனர். கருப்பொருள் நாளும் காதலை வளர்க்க உறுதுணையாகிறது. ஊழ்வினை காரணமாகத் தலைவனும் தலைவியும் இயற்கைப் புணர்ச்சியில் களவொழுக்கம் புரிகின்றனர். இல்லறம் காண விழைந்து நல்மணம் புரிந்து கற்பு வாழ்க்கையின் கடமைகளைத் தலைமேற்கொள்வதாகக் தலைவனின் பண்பு அமைந்துள்ளது.

**கையுறை**

கையுறை என்பது களவு வாழ்க்கையில் தலைவன்தான் விரும்பும் தலைவிக்கு ஆடை கொடுத்து தனக்கானவளாக உறுதிப்படுத்திக் கொள்ளுதல் ஆகும். அகத்திணை வழி காதல்கொண்ட தலைவன் காதல் நோயால் துன்புறுகிறான். தன் மனம் தன்னிடம் இல்லாத நிலையை உணர்கிறான். தலைவன் தலைவியின் பண்பு நலன்களையும், அழகையும் எண்ணி மகிழ்கிறான். தலைவி மீது கொண்டுள்ள காதலைப் பாங்கனுக்கு எடுத்துக் கூறி சீறூரில் உன்ன கொடிச்சி கையில் தன் மனம் இருப்பதாகக் கூறுகிறான்.

***"குன்றக் குறவன் காதல் மடமகள்***
***வரையரமகளிர்ப் புரையும் சாயலள்***
***ஐயள்அரும்பியமுலையள்***
***செய்யவாயினள் மார்பினள் சுணங்கே"***
***ஐங்குநூறு***
***(குறிஞ்சித்திணைபா.எண்- 255. ப.540)***

என்ற தலைவன் கூற்றிலிருந்து காதலின் ஆழம் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. காதல் மொழியும் வெளிப்படுகிறது. காதல் நோயால் தலைவி மட்டுமன்றி தலைவனும் துன்பப்படுகிறான் என்று கூறப்படுகின்றது. காதலின் கையுறையாகத் தழையாடை அளித்து இல்லறத் துணையை உறுதிப்படுத்திக் கொள்ளும் பாங்கிலிருந்து மேன்மையானவனாகத் திகழ்கிறான் தழையாடையைத் தலைவி பெற்றுக்கொள்ளத் தோழியின் உதவியை நாடுவதிலிருந்து தலைவனின் உயர்ந்த செயல்திறத்தை உணர முடிகிறது. இம்முறை இன்றளவும் காணப்படுகிறது. பரிசம் போடுதல் என்று வழங்கப்படுகிறது.

***"கானல் ஞாழல் கவின் பெறுதழையள்***
***வுரையாமகளிரின் அரியள்என்***
***நரையருநெஞ்சம் கொண்டொளித்தோளே"***
***(ஐங்குறுநூறு- 191)***

தழையாடையைக் கையுறையாக அளித்ததை இப்பாடல் வழி அறிய முடிகிறது.

***"முற்போரிமுத்தம் முறுவல் வெறிநாற்றம்***
***வேலுார்கண் ரேய்த்தோவைட்டு"***
***(திருக்குறள். 1113)***

என்று திருக்குறள் தலைவியின் உறுப்புநலன் பாராட்டலை எடுத்துக் கூறுகிறது. தலைவியை காதல் மொழியால் பாராட்டுவதும் அவளின் குடிப்பெருமையைப் பாராட்டுவதிலிருந்தும் தலைவனின் தன்வயப்படுத்தும் திறனை அறிய முடிகிறது. தலைவியின் மனநலம் பேணும் பண்பாளன் என்பதை உணர்த்துகிறது.

**குறியிடம்**

களவு காலத்தில் தலைவனும் தலைவியும் பகற்குறி இரவுக்குறி என்று குறியிடத்தில் சந்தித்துக் கொள்கின்றனர். குறியிடத்து தலைவியைக் காண பல இன்னல்களைக் கடந்து வருகின்ற தலைவன் சொன்ன சொல் தவறாதவனாகத் திகழ்கிறான்.

***"மெல்இயற் குறுமகள் நல்அகம் நசைஇ***
***அரவு இரைதேரும் அஞ்சுவருசிறுநெறி***
***இரவின் எய்தியும் பெறாஅய் அருள்வரப்***

*புல்லென் கண்ணை புலம்பு கொண்டு உலகத்து*
*ஊஉள்ளோர்க்குஎல்லாம் பெருநகையாக*
*காமம் கைம்மிகஉறுதர*
*ஆனா அருபடர் தலைத்தந்தோயே"*
**- (அகநானூறு - 258 பா.வரி 8-14)**

அல்ல குறியினால் துன்பப்பட்டத் தலைவன் தலைவிக்கு அத்துன்பம் ஏற்படாதவாறு காத்துக் கொண்ட உளவியலாளனாக விளங்குகிறான். அகவாழ்விற்கு அறத்தொடு நிற்கும் தோழியின் அறிவுரையை ஏற்று நடக்கும் நலமிக்கவனாகத் திகழ்கிறான். களவு இன்பம் துய்த்து மகிழும் தலைவன் களவு நீட்டித்த வழி தலைவியைப் பிரிய மனமின்றி கற்புநெறிக்குள் இல்லறம் ஏற்க எண்ணுவதிலிருந்து தலைவனின் இல்லறப் பொறுப்பு வெளிப்படுகிறது.

**வரைவிடை வைத்துப் பொருட்பிரிவு**

அன்புவயப்பட்ட தலைவனும் தலைவியும் இயற்கை புணர்ச்சிக்கு பின் களவொழுக்கத்தில் ஈடுபட்டு இன்பம் துய்க்கின்றனர். களவு நீட்டித்த வழி வரைவு மேற்கொள்ள பொருளீட்டச் செல்கிறான். வினையே ஆடவர்க்கு உயிர் என்ற கொள்கையைப் போற்றி ஒழுகுதல் தலைவனின் பண்பாகும். தலைவியின் அனுமதி பெற்'று குறித்த பருவத்தில் பொருளீட்டி வரும்வரை, ஆற்றியிருக்குமாறு அறிவுறுத்துகிறான்.

**"பொருள்வயின் பிரிதலும் அவர்வயின் உரித்தே"**
**- (தொல்-பொருள் அகத்திணை)**

*"காதலர் பிரித்தேன் கையறநலியும்*
*தன்பனிவடந்தைஅற்சிரம்*
*முந்துவந்தனர் - நம் காதலோ"*
**(ஐங்குறு. 223)**

என்ற பாடல் வழி விரைந்து பொருள் ஈட்டி குறித்த பருவத்திற்கு முன்னமே திரும்பி வந்த தலைவனின் செயலிலிருந்து இல்லறக் கடமை புலனாகிறது.

*"புத்தபொங்கர்த் துணையொடுவதிந்த*
*தாதுஊண் பறவைபேதுஉறல் அஞ்சி*
*மணிநாஆர்த்தமாண்வினைத் தேரன்*
*உதுக்காண் தோன்றும் குறும்பொறைநாடன்"*
**- (அகநானூறு.4:11-14)**

என்ற பாடலில் திருமணத்திற்காகப் பொருளீட்டித் திரும்பும் தலைவன் தேரில் வருகிறான். அவ்வழியில் தேன் குடிக்கும் வண்டு இணையுடன் இணைந்து இருப்பதைக் கண்டு தன்னுடையத் தேர் மணி ஒலியினால் இடையுறு ஏற்படும் என எண்ணி தேரின் மணிநாவைப் பிடித்துக் கொண்டான் இச்செயலினால் பிற உயிர்களின் உணர்வைப் புரிந்துகொண்ட தலைவனின் மன உணர்வு வெளிப்படுகிறது. மேலும் திருமணத்திற்காகப் பொருளீட்டியத் தலைவன் தோழியிடம் பிரிவுத்துயரைத் தலைவி எவ்வாறு ஆற்றியிருந்தாள் என்று வினவுவதிலிருந்து தலைவியின் துயர் துடைக்கும் பண்பு வெளிப்படுகிறது.

காதல்நலம் புரிந்த தலைவன் திருமணம் வேண்டி தலைவியின் தமர்களிடம் பெண் கேட்டு தன் உறவினர்களை அனுப்புகிறான். முதலில் மறுத்த தலைவியின் உறவினர்கள் தலைவனின் பண்பு நலன்களை அறிந்து பெண் கொடுக்க உறுதிஅளிக்கின்றனர்.

**வரைவிற்கான சூளுரை**

தலைவியிடத்து உன்னை விரைவில் திருமணம் புரிந்து விருந்தோம்பி இல்லறக் கடமைகள் ஆற்றுவேன் என்று தலைவன் குறிஞ்சிக் கடவுளான முருகனின் மீது சூளுரைக்கிளான்.

*"பிறங்குமலை*
*மீமசைக் கடவுள் வாழ்த்திகைதொழு*
*தேமுறுவஞ்சினம் வாய்மையிற்றேற்றி"*
**- (குறிஞ்சிப்பாட்டு 209, 210)**

என்பதிலிருந்து தலைவனின் காதல் உறுதிப்பாட்டை அறிய முடிகிறது. விருந்தோம்பல் மற்றும் தன் தமர்களைப் பேணும் தலைமைப்பண்பு போன்றவற்றிலிருந்து

குறிஞ்சிநில மக்களின் குழு வாழ்க்கை முறையை தெரிந்து கொள்ள முடிகிறது.

**"நீ விட்டனையோஅவர் உற்ற சூளே?"**

**- (ஐங்குறுநூறு 227)**

என்ற தோழிக்கூற்றிலிருந்து தலைவனின் உண்மை திறத்தையும் நம்பிக்கைக்கு உரியவனாகச் செயலாற்றிய நிலையையும் உணர முடிகிறது.

**"நேரிறைமுன்கைபற்றிநுமர்தர**
**நாடறிநன்மணம் அயர்கம்"**

**(குறிஞ்சிப்பாட்டு 231-232)**

என்று தலைவன் கூறுவதிலிருந்து உறவினர்கள் முன்னிலையில் திருமணம் செய்ய தலைவன் விரும்புவதையும், உளவினர்களைப் பேணி வாழ்வதையும் அறிய முடிகிறது.

**"அம்மவாழிதோழி! நம் ஊர்**
**நிரந்து இலங்கு அருவிய**
**நெடுமலைநாடன்**
**இரந்துகுறையுறா அன் பெயரின்**
**என் ஆவதுகொல்-தம் இன் ஊர்**
**நிலையே?"**

**- (ஐங்குநூறு - 228)**

என்று தோழி தலைவனின் சீரிய திறத்தைக் கூறுவதிலிருந்து தலைவனின் ஆளுமைத் திறன் புலனாகிறது.

**"நல் மலைநாட! நீசெயின்**
**நின் நயந்துஉறைவிஎன்னினும் கலிழ்மே"**

**- (ஐங்குநூறு - 273)**

என்ற கூற்றும் அரண் செய்கிறது. உறவினர்கள் முன்னிலையில் தலைவியைத் திருமணம் செய்து மகிழ்கிறான்.

## கற்பொழுக்கம்

நல்மணம் புரிந்த தலைவன் இல்லறம் பேணுபவனாகவும், உறவினர்களை காப்பவனாகவும் திகழ்ந்து விருந்தோம்பி நற்கடன் புரிகின்றான்.

**"விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்**
**மறவும் அன்னதிழவோர் மாண்புகள்"**

**- பொருள் கற்பியல் - 11**

என்பதிலிருந்து தலைவனுக்குரிய இலக்கணமாகத் தொல்காப்பியம் கூறுகிறது.

**"கற்பெனப்படுவதுகரணமொடுபுணரக்**
**கொளற்குறிமரபிற் கிழவன் கிழத்தியைக்**
**கொடைக்குரிமரபினோர் கொடுப்பக்**
**கொள் வதுவே"**

**(தொல்-பொருள் -142)**

என்று திருமணத்திற்கான இலக்கணத்தைத் தொல்காப்பியம் எடுத்துரைக்கிறது. இல்லற வாழ்வில் தலைவன் தான் ஈட்டியப் பொருளைத் தலைவியிடம் கொடுத்து ஒருவருக் கொருவர் விட்டுக் கொடுத்து ஒருவர் நலம் மற்றொருவர் பேணுபவராக விளங்குகின்றனர். இக்கருத்தையே,

**"நின்நயந்துஉரைறநர்க்கும் நீநயந்து**
**உறைநர்க்கும்**
**பன்மாண் கற்பின் நின் கிளைமுதலோர்க்கும்**
**கடும்பின் கடும்பசிதீரயாழநின்**
**நெடுங்குறிஎதிர்ப்பைநல்கியோர்க்கும்**
**இன்னோர்க்குஎன்னாதுஎன்னோடும் சூழாது**
**வல்லாங்குவாழ்ந்தும் என்னாதுநீயும்**
**எல்லேர்க்கும் கொடுமதி-**
**மனைகிழவோயே**
**பழந்தூங்குமுதிர்த்துக் கிழவன்**
**திருந்துவேல் குமணன் நல்கியவளனே"**

**(புறநானூறு பா.எ.163, ப.387)**

என்ற புறநானூற்றுப்பாடல் சான்றாகிறது. யான் பெற்று வந்த இச்செல்வம் அரசன் மணன் அளித்தது. இவற்றை எல்லோருக்கும் கொடு. இன்னாருக்கு என்று கணக்குப் பார்க்காமல் என்னிடம் அனுமதி கேட்காமல் எல்லோருக்கும் கொடு என்று கூறுவதிலிருந்து தலைவனின் இல்லற மாண்பு சுட்டிக் காட்டப்படுகிறது. பொருளீட்டுவதற்கு பிரிந்து சென்ற தலைவன் கார்காலம் வருவதாகக் கூறிப் பிரிகிறான். குறித்த பருவத்திற்கு முன்னமே தலைவன் பொருளீட்டி தலைவியைக் காண விரைவாக வந்து தலைவியின் துயர் துடைக்கிறான்.

## முடிவுரை

ஐங்குறுநூறு சுட்டும் குறிஞ்சிநில அகமாந்தர்களின் அகத்திணை வாழ்வியலை களவு, கற்பு என்று இரும்பெரும் பிரிவுகளாகக் காண முடிகிறது. குறிஞ்சி நிலத்தில் வாழும் தலைவனும் தலைவியும் களவு வாழ்க்கையில் தொடங்கி கற்பு வாழ்க்கையில் இல்லறம் ஏற்கும் வரை அவர்களின் அகத்திணை நிகழ்வுகளை அறிய முடிகிறது. இந்நிலத்தலைவன் களவு ஒழுக்கக் காலத்தில் நேர்த்தியானவனாக விளங்குகிறான். பொருள்வயிற் பிரிவில் தலைவன் தலைவியைத் தோழியின் பாதுகாப்பில் விட்டுச் செல்கிறான். கற்பு வாழ்க்கையில் இல்லறத்தைை நடத்துவதற்கு ஏற்ப சூழலைத் தலைவனே தலைவிக்கு ஏற்படுத்தித் தருகிறான். தமர்களைப் பேணிகாக்கும் தலைமைப் பண்புடன் திகழ்கிறான். அனைத்து திறமைகளும் ஒருங்கே பெற்ற தலைவனின் ஆளுமைப் பண்பை ஐங்குறுநூறு குறிஞ்சித்திணைப் பாடல்கள் உணர்த்துகின்றன.

## துணைநூற்பட்டியல்

1. அகநாநூறு இரா.செயபால், (உ-ஆ), நியுசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, முதற்பதிப்பு 2007
2. ஐங்குறுநூறு அ.தட்சணாமூர்த்தி, (உ-ஆ), நியுசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, முதற்பதிப்பு 2004
3. திருக்குறள் ஞா.தேவநேயப் பாவணார், (உ-ஆ), வையவிபதிப்பகம், சென்னை, மு.ப 2010
4. தொல்காப்பியம் பொருள் நச்சினார்க்கினியர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை மு.ப 2007
5. பத்துப்பாட்டு வி.நாராயணன், (உ-ஆ), நியுசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னைமு.ப 2004
6. புறநானூறு கு.வெ. பாலசுப்பிரமணியன், (உ-ஆ), நியுசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை மு.ப 2009